செ.வெ.எண்: 891

நாள் : 26.11.2009

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் ஆற்றுப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஆற்றில் படகு மூலம் சென்று பணிகளை பார்வையிட்டார்கள்.

சிங்கப்பூரில் அரசுப் பயணமாக உள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும் மற்றும் அவருடன் சென்றுள்ள அதிகாரிகளும் இன்று (26.11.2009) சிங்கப்பூரில் ஆற்றை சுத்தப்படுத்தும் விதம் குறித்து, சிங்கப்பூர் அரசின் Public Utility Board என்ற அரசின் உயரதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

1977ஆம் ஆண்டிற்கு முன்பாக முற்றிலும் மாசுபட்டிருந்த சிங்கப்பூர் ஆற்றை 10 ஆண்டுகளில் அவர்கள் அந்த ஆற்றை மேம்படுத்திய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடம் விளக்கி கூறினார்கள்.

இந்த சுத்தப்படுத்தும் பணிகள் முடிந்த பின்பாக, ஆற்றின் ஓரம் உள்ள பகுதிகளில் வணிக ரீதியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும், அழகு ஊட்டுவதற்காக தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றியும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

பின்னர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும், குழுவினரும் சிங்கப்பூர் ஆற்றுக்குள் உள்ளாக, கடல் நீர் புகாமல் இருப்பதற்காக கட்டப்பட்டுள்ள தடுப்பு அணையை பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூர் ஆற்றில் படகு மூலமாக 3 கிலோ மீட்டர் வரை சென்று, ஆற்றின் ஓரப்பகுதிகளில் செய்யப்பட்டுள்ள பணிகளை கண்டறிந்தார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9